# DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 73/2020** |
| Posecution Witness | : | **PW 2** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜான்சன் | Caste | : | |
| Father's Name | : | அற்புததாஸ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 41 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 07.02.2023.**

***எதிரிகள் 1 முதல் 4 6 முதல் 11 வருகை .எதிரி 5 வருகை இல்லை குவிமுச பிரிவில் 317 ன்படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை : -**

நான் மேலத்திருப்பந்துருத்தியில் வசிக்கிறேன். நான் தென்பெரம்பூர் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 12.06.2019 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் ஆற்றில் கிடப்பதாக கிராமத்துகாரர்கள் போன் செய்தார்கள். யார் போன்செய்தார் என்று பெயர் தெரியாது. நான் கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். நானும் கிராம நிர்வாக அலுவலரும் பணவெளி கீழமாரியம்மன் கோயில் முக்கால் கிலோமீட்டர் தள்ளி உள்ள வெட்டாறு தென்புறத்திற்கு பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்றோம். கிராம நிர்வாக அலுவலர் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். ஆம்புலன்சை வரச்சொல்லி பிரேதத்தை எடுத்து சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

**1 முதல் 6, 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவ இடத்திற்கு நாங்கள் போனபோது காலை 8, 81/2 மணி இருக்கும். அதிகாலை 3 மணி என்று சொன்னால் சரியல்ல. நானும் கிராம நிர்வாக அலுவலுரும் சேர்ந்துதான் சம்பவ இடம் போனோம். நான் தனியான முதலில் பார்க்கவில்லை. போலிசார் புகார் கொடுத்தற்கு மறுநாள் என்னை விசாரித்தார்கள். எனக்கு செல்போனில்தான் தகவல் தெரிவித்தார்கள். கிராமநிர்வாக அலுவலர் தென்னங்குடியில் தங்கியிருக்கிறார். கிராம உதவியாளர் தான்

பணிபுரியும் கிராமத்திலேயே தங்கி இருக்கவேண்டும் என்றால் சரிதான். நான் மேலதிருப்பந்துருத்தியில் தங்கிகொண்டு தினமும் பணிகிராமத்திற்கு வருவேன். ஆண் பிரேதம் இரத்தகாயங்களுடன் மணலில் காய்ந்துபோய் கிடந்தது. சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் 7, 8 கி.மீ துாரம் இருக்கும். நானும் கிராமநிர்வாக அலுவலரும் இருசக்கரவாகனம் வைத்திருக்கிறோம். சம்பவ இடத்தில் இருந்துது இருசக்கரவாகனத்தில் 20 நிமிடத்தில் காவல்நிலையத்திற்கு செல்லலாம். ஆம்புலன்சில் பிரேதத்திற்கு அனுப்பிவிட்டு எங்கள் அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் புகாரை எழுதிக்கொண்டு காவல்நிலையம் சென்று தாமதமாகத்தான் புகார் கொடுத்தார். கிராமநிர்வாக அலுவலரின் அலுவலகம் பனைவெளியில் உள்ளது. தென்பெரம்பூரில் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சடலத்தை பார்க்கவில்லை என்றும் கிராமநிர்வாக அலுவலர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக அவரிடம் வேலை பார்க்கிறேன் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் நான் பார்ப்பதற்கு 4, 5 நாட்களுக்கு முன்பே இறந்தவிட்டார் என்று சொன்னால் அப்படியில்லை. நான் தினமும் அந்த வழியாக வேலைக்கு செல்கிறேன். அப்படி பார்க்கவில்லை. போலிசார், புகார் கொடுத்த அன்றும் என்னை விசாரித்தார்கள் அதற்கு அடுத்தநாளும் விசாரித்தார்கள்.

**<u>7 ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை</u>**

போலிசாரிடம் நான் எழுத்துமூலமாக புகாரோ, அலைபேசியில் தகவலோ தரவில்லை. போலிசர் சம்பவ இடம் வந்ததும் பிரேதத்தை ஆம்புலன்சில் எடுத்துசென்ற பிறகுதான் எங்கள் அலுவலகத்திற்கு சென்று புகார் எழுதினார். ஆம்புலன்சில் வந்தவர்கள்தான் பிரேதத்தை எடுத்தார்கள். சம்பவ இடத்தில் என்னிடத்தில் யாரும் கையெழுத்து வாங்கவில்லை. புகார் கொடுத்தற்கு பிறகு மறுநாள் 13.06.2019 ம் தேதி காவல்நிலையத்திற்கு சென்றேன். மறுநாள் காவல்நிலையத்தில் நான் கையெழுத்து போடவில்லை. எதுவும் எழுதிதரவில்லை. அதன்பிறகு நான் காவல்நிலையத்திற்கு போகவில்லை. 14.06.2019 ம் தேதி நான் காவல்நிலையம் சென்று கையெழுத்து போட்டு கொடுத்து விசாரணை செய்யப்பட்டிருந்தால் அது பொய்யானது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒம்/-) A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | **II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR** |
| Case No. | : | **SC 73/2020** |
| Posecution Witness | : | **PW3** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேந்திரன் | Caste | : | |
| Father's Name | : | கோவிந்தசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 52 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 07.02.2023.**

***எதிரிகள் 1 முதல் 4 6 முதல் 11 வருகை .எதிரி 5 வருகை இல்லை குவிமுச பிரிவில் 317 ன்படி மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை** : -

நான் பணவெளி கிராமத்தில் காளியம்மன் கோயில் தெருவில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை பார்க்கிறேன். நான் 4 வருடத்திற்கு முன்பு பணவெளிக்கு அருகே உள்ள வெட்டாறு அருகே செல்லும்போது வெட்டாற்றில் ஒரு ஆண் பிரேதம் கிடந்ததால் கும்பலாக இருந்தது. நான் போய் பார்த்தேன். அங்கு VAO, RI, போலிசார் ஆகியோர் அங்கு வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 6 , 8 முதல் 11 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவ இடத்தில் கும்பலாக 50, 60 பேர் இருந்திருப்பார்கள். என் பெயர் சொன்னால் போலிசாருக்கு தெரியும். அதனால் போலிசாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7 வது எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக ஊரில் நான் கையெழுத்து போட்டு

கொடுத்தேன் காவல்நிலையத்தில் கையெழுத்து போட்டுதரவில்லை. போலிசார் எழுதிக்கொடுத்த தாளில் கையெழுத்து போட்டேன் என்ன விவரம் என்று எனக்கு தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒம்/-) A. மலர்விழி,
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.